# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2054/7 - 2018 ජනවාරි මස 15 වැනි සඳුදා - 2018.01.15

*2054/7 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி 24/1951* (xiv)

**மோட்டார் வாகனச் சட்டம் (203 ஆம் அத்தியாயம்)**

*(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5, 19, 140, 141 மற்றும் 142 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

நிமல் சிறிபால டி சில்வா,<br>போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள்<br>அமைச்சர்.

கொழும்பு,<br>*2018, சனவரி 15.*

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள், 2018 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, மோட்டார் வாகன (நான்கு சில்லு வண்டி) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. வாடகைக்கு அல்லது வேறு வகையில் ஆட்களை அல்லது பண்டங்களை இடம்பெயர்த்தும் நோக்கத்திற்காக நான்கு சில்லு வண்டியொன்றைப் பயன்படுத்துகின்ற அத்தகைய நான்கு சில்லு வண்டியின் ஒவ்வொரு சொந்தக்காரரும் நான்கு சில்லு வண்டியின் கதவுகள், சென்று கொண்டிருக்கும்போது முழுமையாக மூடப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.




இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

3. நான்கு சில்லு வண்டியொன்றின் சொந்தக்காரர் ஒருவர் –

(அ) நான்கு சில்லு வண்டியின் உயரம், அகலத்தின் நூற்றி ஐம்பது சதவீதத்துக்குக் குறைவாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) சில்லுத்தளம் மற்றும் தரையிளக்கத்தின் விகிதம் எட்டைவிடக் குறைவாக இருத்தல் வேண்டும் எனவும் ;

(இ) நெம்புகோல்களுடனான பொறிமுறையொன்று தவிர வலது பக்கச் செலுத்துகை முறையான பொறிமுறை ரீதியான சிறந்த உந்துகல இயக்காழிப் பொறிமுறை வாகனத்துக்குப் பொருத்தப்படுகிறது எனவும் ;

(ஈ) உந்துகல இயக்காழியொன்றினால் இயக்கப்படும் உந்துகல இயக்காழிப் பொறிமுறை வாகனத்துக்குப் பொருத்தப்படுகின்றது எனவும் ;

(உ) ஒவ்வொரு வயது வந்தவருக்காக அனுமதிக்கப்பட்ட நான்கு சில்லு வண்டியொன்றின் எல்லா ஆசனங்களின் தாங்குகைகளும் ஒவ்வொரு ஆசனத்தின் முன்முடிவிடத்துடன் நேர்கோடு ஒன்றில் அளவிடப்பட்ட குறைந்தபட்சம் 382 மில்லி மீற்றர்கள் கொண்ட ஆசன இடப்பரப்பொன்றுடன் குறித்த நிலையில் உறுதியாகப் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் எனவும் ;

ஆயின், எவ்வாறாயினும் ஒவ்வொரு ஆசனத்தின் முன் முடிவிடத்துடன் நேர்கோடு ஒன்றில் அளவிடப்பட்ட குறைந்தபட்சம் 230 மில்லி மீற்றர்கள் கொண்ட ஆசன இடப்பரப்பொன்று ஒவ்வொரு குழந்தைக்கும் அனுமதிக்கப்படல் வேண்டும் எனவும் ;

(ஊ) நான்கு சில்லு வண்டியொன்றின் சாரதி ஆசனத்தின் முன் முடிவிடத்திற்கும் சட்டகத்தின் மிகக்கிட்டிய முடிவிடத்தின் ஊடாகச் செல்கின்ற செங்குத்து சமதளப்பரப்புக்கும் இடையிலான மிகக் குறைந்த தூரம் 300 மில்லி மீற்றர்களைவிடக் குறைவாக இருத்தலாகாது எனவும் ;

(எ) நான்கு சில்லு வண்டியொன்றின் பயணிகள் ஆசனங்களின் முன் முடிவிடத்திற்கும் முன் ஆசனமொன்றின் பின்தாங்கியின் மிகக்கிட்டிய புள்ளியினூடாகச் செல்கின்ற செங்குத்தான சமதளப்பரப்புக்கும் இடையிலான மிகக்குறைந்த தூரம் 230 மில்லி மீற்றர்களைவிடக் குறைவாக இருத்தலாகாது எனவும் ;

(ஏ) நான்கு சில்லு வண்டியின் மீது பொருத்தப்பட்ட எவையேனும் அடுத்தடுத்த இரண்டு ஆசனங்களின் பின்தாங்கிக்கிடையிலான ஆகக்குறைந்த தெளிவான தூரம் 660 மில்லி மீற்றர்களைவிடக் குறைவாக இருத்தலாகாது எனவும் ;

(ஐ) ஒவ்வொருவருக்கும் நேர் எதிரான ஆசனங்கள் நான்கு சில்லு வண்டி ஒன்றிற்கு பொருத்தப்படுதலாகாது எனவும் ;

(ஒ) நான்கு சில்லு வண்டிக்கு ஹைதரோலிக் கால் நிறுத்திப் பொறிமுறை பொருத்தப்படுதல் வேண்டும் எனவும்

உறுதிப்படுத்துதல் வேண்டும்.

4. நான்கு சில்லு வண்டியின் வேக எல்லை மணித்தியாலத்திற்கு 50 கிலோ மீற்றராகவிருத்தல் வேண்டும்.

5. நான்கு சில்லு வண்டியொன்றின் சொந்தக்காரர் அல்லது சாரதி, அத்தகைய நான்கு சில்லு வண்டி வீதியில் சென்று கொண்டிருக்கும் வேளையில் ஏதேனும் விளம்பரம், துண்டுப்பிரசுரம் அல்லது கைத்துண்டை விநியோகிப்பதற்கு எவரேனும் ஆளை அனுமதித்தலாகாது.

6. நகர்ந்துகொண்டிருக்கும் அல்லது நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் நான்கு சில்லு வண்டியொன்றின் சாரதி ஏனைய வீதிப் பாவனையாளர்களுக்கு இடைஞ்சலை அல்லது தொல்லையை ஏற்படுத்துமளவிற்கு ஒலியை வெளிப்படுத்தும் ஏதேனும் சாதனம் அல்லது கருவியைப் பயன்படுத்துதலாகாது அல்லது பயன்படுத்தப்படச் செய்வித்தல் ஆகாது. ஒலியானது நான்கு சில்லு வண்டியினுள் அடக்கப்பட்டிருக்கின்றது எனவும் அதனில் பயணிக்கின்றவர்கள் மட்டும் கேட்பதற்கென உட்கருதப்பட்டது எனவும் உறுதிப்படுத்துவதற்கு ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும்.

7. (1) நான்கு சில்லு வண்டியின் சொந்தக்காரர் அல்லது சாரதி -

(அ) எந்த வேகத்தில் நான்கு சில்லு வண்டி செலுத்தப்படுகின்றதோ அந்த வேகத்தை சாரதிக்கு எல்லா நேரங்களிலும் தெளிவாகச் சுட்டிக்காட்டுவதற்கு நான்கு சில்லு வண்டிக்கு கதிமானி பொருத்தப்படுகின்றது எனவும் ;

(ஆ) நான்கு சில்லு வண்டியின் முன்பக்கத்திற்குத் தடையற்ற பார்வையைப் பெறுவதற்கு நான்கு சில்லு வண்டியின் சாரதிக்காக மின்னியல் அல்லது இலத்திரனியல் தொழிற்பாட்டு வளித்திரைத்துடைப்பம் பொருத்தப்படுகின்றது எனவும் ;

(இ) நான்கு சில்லு வண்டி ஒரே அளவிலான நான்கு வாயுவியக்கு டயர்களினால் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் எனவும், நான்கு சில்லு வண்டி வீதியில் பயன்படுத்தப்படுகின்ற வேளையில் அச்சொன்றுக்கு சில்லைப் பொருத்துவதற்கு குறைந்தபட்சம் ஒரு மாற்றுச் சில்லையும் வேறு சாதனங்களையும் கொண்டு செல்லுதல் வேண்டும் எனவும்

உறுதிப்படுத்தல் வேண்டும்.

(2) நான்கு சில்லு வண்டியின் சொந்தக்காரர், பின்வரும் ஆக்கக்கூறுகள் நான்கு சில்லு வண்டிக்கு பொருத்தப்பட்டிருக்கின்றது எனவும், அவை நல்ல மற்றும் தொழிற்படும் நிலைமையில் உள்ளன எனவும் உறுதிப்படுத்துதல் வேண்டும் -

(அ) இரண்டு வெளிப்புற பின்புறப்பார்வைக் கண்ணாடிகள் ;

(ஆ) நேர் மற்றும் தாழ்ந்த ஒளிக்கற்றைகளுடன் கூடிய தலைமை விளக்குகள் மற்றும் காட்டி ;

(இ) பின்புற அல்லது நிறுத்துதல் விளக்கு ;

(ஈ) பக்கத் திசைகாட்டி விளக்கு ;

(உ) பின்நோக்கிச் செல்கை விளக்கு ;

(ஊ) இரண்டு உட்புற விளக்குகள் ;

(எ) தரிப்பிட விளக்குகள் ; அத்துடன்

(ஏ) குழல்.

8. நான்கு சில்லு வண்டி, கட்டணம் அல்லது வெகுமதிக்காக ஆட்கள் அல்லது பண்டங்களைக் கொண்டு செல்லும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றவிடத்து :-

(அ) பின்வரும் தகவல்கள் பயணிகளுக்குத் தெளிவாகத் தெரியக்கூடியளவிற்கு சாரதி ஆசனத்தின் பின்பக்கம் வெளிக்காட்டி வைக்கப்பட்டிருத்தல் வேண்டும் :-

(i) வாகனப் பதிவு இலக்கம் ;

(ii) சாரதியின் பெயரும் சாரதி உரிம இலக்கமும் ;

(iii) சாரதியின் புகைப்படம் ஒன்று (அளவு 65 x 50 மில்லி மீற்றர்கள்) ;

(iv) அவசரகால நிலைமையில் அறிவிப்பதற்கு வாகனம் பதிவுசெய்யப்பட்ட அந்தந்த பொலிஸ் நிலையங்களின் தொலைபேசி இலக்கங்கள்.

(ஆ) நான்கு சில்லு வண்டியின் சாரதி -

(i) முறையான ஒழுங்கான முறையொன்றில் நடந்துகொள்ளுதல் வேண்டும் ;

(ii) புகைத்தல் ஆகாது ;

(iii) வாடகையின் முடிவுறுத்தல் புள்ளி வரை முடிவுறுத்தலாகாது ; அத்துடன்

(iv) பயணிகளால் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி மிகக்குறைந்த நேரத்தினுள் மிகக்குறைந்த சாத்தியமான மார்க்கம் மூலம் அவர்களது சேருமிடங்களுக்குப் பாதுகாப்பாகப் பயணிகளை ஏற்றிச் செல்லுதல் வேண்டும்.

9. (1) வாடகைக்காக அல்லது வேறுவகையாக ஆட்களை அல்லது பண்டங்களை இடம்பெயர்த்துவதற்காக நான்கு சில்லு வண்டியொன்றைப் பயன்படுத்தும் நான்கு சில்லு வண்டியின் ஒவ்வொரு சொந்தக்காரரும் வாடகை வண்டி மானியொன்றைப் பொருத்துதல் வேண்டும். அது, வாடகையின் போதான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தொழிற்படுதல் வேண்டும். அத்துடன் பயணிகள் இலகுவாகவும் தெளிவாகவும் பார்வையிடுவதற்காக "வாடகை வண்டி" என்ற பதத்தை வெளிக்காட்டிவைப்பதற்கு 10 சென்றி மீற்றர் உயரத்தை விஞ்சாத காட்சிப் பலகையொன்றை முன் இறுதியில் மேல் கூரையின் மீது பொருத்துதல் வேண்டும்.

(2) அத்தகைய கட்டணக் கொடுப்பனவின் மேல், அப்பயன்பட பற்றுச்சீட்டொன்றை வழங்குதல் அத்தகைய நான்கு சில்லு வண்டிச் சாரதியின் கடமையாதல் வேண்டும். அத்தகைய பற்றுச்சீட்டு, பயணித்த தூரம், வாகனப் பதிவிலக்கம், விதிக்கப்பட்ட தொகை மற்றும் பற்றுச்சீட்டுத் திகதியை உள்ளடக்குதல் வேண்டும்.

10. நான்கு சில்லு வண்டியொன்றின் சொந்தக்காரர் ஒருவர், உற்பத்தியாளரால் அதன்மேல் குறியிடப்பட்ட விவரணமான தகவல் தவிர, எழுத்துக்கள், எண்கள் அல்லது இலக்கங்கள் எதுவும் நான்கு சில்லு வண்டியின் முன்புறத்தின் மீதும் பின்புறத்தின் மீதும் அடையாளப்படுத்தப்படவில்லை என உறுதிப்படுத்துதல் வேண்டும்.

11. இவ்வொழுங்குவிதிகளில் "நான்கு சில்லு வண்டி" ஆனது (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தில் உள்ளவாறான அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*02-31*